# 4

# இசையும் சபைப் பிதாக்களும்

இரண்டாம் நூற்றாண்டு எழுத்தாளர்கள் ஏவுதல் பெற்றிருக்கவில்லை. அவர்களின் கூற்றுகள் இருபத்தியோராம் நூற்றாண்டு சபைக்கு அதிகாரத்துவம் உள்ளதாக இருப்பதும் இல்லை. இருப்பினும் அவர்களின் எழுத்துக்கள், அப்போஸ்தலர்களின் காலத்தைப் பின்தொடர்ந்து உடனடியாக வந்த நாட்களில் சபையைப் பற்றி அறியக்கூடிய எல்லாவற்றையும் உள்ளடக்கி இருக்கின்றன. அவர்கள், புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் பயன்படுத்திய கிரேக்க மொழியை வாசித்தனர் மற்றும் பேசினர். ஆகவே கிரேக்க மொழியில் எழுதப்பட்ட புத்தகங்கள் மற்றும் நிருபங்களை அவர்கள் எவ்வாறு புரிந்துகொண்டனர் என்று ஆலோசனை செய்தல் நமக்கு உதவி நிறைந்திருப்பதாக நாம் கண்டறியலாம்.

கி.பி. 110ம் ஆண்டு வாக்கில், கருங்கடலுக்கு நேர்தெற்கில் இருந்த பித்தினியா என்ற மாகாணத்திற்கு, பிளீனி என்பவர் ஆளுநராக இருந்தார். அவர், ரோமப்பேரரசர் ட்ரேஜன் என்பவருக்குத் தமது மாகாணத்தில் கிறிஸ்தவர்களை எவ்வாறு கையாள்வது என்று கற்றுக்கொள்ளுமாறு எழுதினார். கிறிஸ்தவ ஆராதனைக் கூடுகையை ஒருக்காலும் வந்து பார்த்திராத புறதெய்வ வணக்கக்காரரான ஒரு ஆளுநர் ஆராதனை ஊழியத்தின் விபரங்களை அறிந்திருப்பார் என்று எதிர்பார்க்க இயலாது. அவர் அறிந்திருந்தது எதுவோ, அதை கிறிஸ்தவர்களிடத்தில் வாய்மொழி விசாரணை வழியாகவே அவர் அறிந்திருந்தார். அவர் தமக்குத் தரப்பட்டிருந்த தகவலில் இருந்து, கிறிஸ்தவர்கள் “வாரத்தின் குறிப்பிட்ட ஒரு நாளில் பொழுது விடிவதற்கு முன்னர் ஒன்றுகூடி … கடவுளிடத்தில் பாடுவது போலக் கிறிஸ்துவுக்குக் கீர்த்தனை ஒன்றைப் பாடினர்” என்று புரிந்துகொண்டிருந்தார்.[1]

*Psallein* என்ற வினைச்சொல் அப்போஸ்தலிக்கப் பிதாக்களின் எழுத்துக்களில் ஒரே ஒருமுறை மாத்திரம் உள்ளது. அது சங்கீதம் 22:22ஐ பர்னபா மேற்கோள் காண்பித்த, “உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து, சபை [*ekklēsia*] நடுவில் உம்மைத் துதிப்பேன்” என்று கூறும் இடமாகும்.[2] எபேசியர் 5:19 வசனமோ அல்லது கொலோசெயர் 3:16 வசனமோ, அப்போஸ்தலிக்கப் பிதாக்களின் அல்லது தொடக்ககாலப் பரிந்துரையாளர்களின் எழுத்துக்களில் குறிப்பிடப் பட்டிருப்பதாகத் தோன்றவில்லை. இருப்பினும், மற்ற தொடக்ககால ஆதாரவளங்கள், பாடுதல் என்பது இருதயத்தில் இருந்து வரவேண்டும் என்பதை வலியுறுத்தின. அலெக்சந்திரியா நகரைச் சேர்ந்த கிளமென்ட் என்பவர், “ஆகையால் அவர் நம்மைக் குமாரர்களாக ஏற்றுக்கொள்ளும்படிக்கு, நாம் அவருக்கு நமது உதடுகளில் இருந்து மாத்திரமல்ல, ஆனால் நமது இருதயத்தில் இருந்தும் நித்திய துதியை ஏறெடுக்கக்கடவோம்” என்று எழுதினார்.[3] ரோமாபுரியில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கு இக்னேஷியஸ் பின்வருமாறு புத்திகூறினார்: “அன்பில் ஒன்றுகூடியுள்ள நிலையில், நீங்கள் கிறிஸ்து இயேசு மூலமாகப் பிதாவுக்குத் துதியை [*aineite*] பாடக்கடவீர்கள்.”[4] மற்ற சந்தர்ப்பப் பொருட்களில் இக்னேஷியஸ் இசைக்கருவிகளைப் பற்றிக் குறிப்பிட்டார், ஆனால்

ஆராதனையில் அவற்றின் பயன்பாடு பற்றி அவர் கலந்துரையாடவில்லை. மூப்பருக்குக் கீழ்ப்படிதல் பற்றிய தமது புத்திகூறுதலில் அவர் பின்வருமாறு கூறினார்:

> ஏனெனில், நியாயமாக புதுப்பிக்கப்பட்ட உங்கள் மூப்பர்த்துவம், தேவனுக்குப் பாத்திரரான நிலை என்பது சுரமண்டலத்தில் கம்பிகள் போன்று மிகச்சரியாகப் பொருத்தப்பட்டுள்ளது. ஆகவே உங்கள் உடன்படிக்கை மற்றும் இசைவிணக்கமான அன்பில், இயேசு கிறிஸ்து பாடப்படுகிறார். மற்றும் அவர் உங்கள் விண்ணப்பங்களைக் கேட்டு உங்கள் கிரியைகளினால் உங்களைத் தமது குமாரனுடைய உறுப்புகள் என்று உய்த்துணரும்படி, மனிதர் பின் மனிதராக, ஒரு பாடகர் குழுவாகி, அன்பின் இசைவிணக்கமாயிருந்து, தேவனுக்குப் பாடலை ஒன்றித்துப் பாடி, இயேசு கிறிஸ்து மூலமாகப் பிதாவை ஒரே குரலில் பாடிப்புகழுங்கள்.[5]

ஜஸ்டின் மார்ட்டியர், ஞாயிறு ஆராதனை பற்றிய தமது சுருக்கமான விவரிப்பில், பாடுதலைப் பற்றிக் குறிப்பிடவில்லை;[6] ஆனால் அவர், தாவீது சங்கீதங்களைப் பாடுதல் பற்றிக் குறிப்பிட்டார்.[7] வேறொரு இடத்தில் அவர் சங்கீதங்களில் இருந்து பின்வரும் வசனத்தை மேற்கோள் காண்பித்தார்: "கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள்; பூமியின் குடிகளே, எல்லாரும் கர்த்தரைப் பாடுங்கள்" [சங்கீதம் 96:1]; "அவர் பூமியின் அனைத்துக் குடிகளையும் ஆதரிக்கிறார், அவர் இந்த இரட்சிப்பின் இரகசியத்தை அறிந்துள்ளார் … எல்லாவற்றிற்கும் பிதாவாகிய தேவனைத் துதியுங்கள்."[8] "பாடுதல்" என்பதற்கான *ode* மற்றும் *psallō* என்ற இரு வார்த்தைகளும் ஒரே அர்த்தத்தைக் குறிக்கும் வகையில் இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஜேம்ஸ் மெக்கின்னன் என்பவர், வழிபாடு பற்றிய அக்கறைகளுக்கு மாறாக ஒழுக்கம் பற்றிய அக்கறைகளில் இருந்து இசைக்கருவிகள் பயன்படுத்துல் பற்றி சபைப்பிதாக்களிடத்தில் இருந்து எழுந்த எதிர்மறைக் கூற்றுக்களைச் சுட்டிக்காண்பித்தார்.[9] ஒரு சுரமண்டலத்தை (*kithara*) அனுமதிக்கும் கிளெமென்ட் என்பவரின் கூற்றானது, ஆராதனையின் சந்தர்ப்பப்பொருளில் அல்ல, ஆனால் ஒரு இல்லத்தின் சந்தர்ப்பப் பொருளில் அமைந்துள்ளது. இசைக்கருவி பற்றிய ஒழுக்கரீதியான அவப் பெயருடன், ஒரு இசைக்கருவியை ஆராதனையில் பயன்படுத்துதல் என்பது நினைத்துப் பார்க்க இயலாததாக இருந்தது. அதை வழிபாட்டில் பயன்படுத்துதல் [அதாவது, பயன்படுத்தாது இருத்தல்] பற்றி சபைகளில் முரண்பாடான கருத்து எதுவும் இருக்கவில்லை. அது ஒரு கேள்வியாகவே இருக்கவில்லை.[10]

நான்காம் நூற்றாண்டின் இறுதியில், ஜான் கிறிஸோஸ்தோம் (c. 347-407), "*aulus* [*ஒரு வகை நடனத்திற்கு இசை*] வாசிப்பவர்கள் இருக்கும் இடத்தில் கிறிஸ்து இருப்பதில்லை" என்று கூறினார். அவர் கைத்தாளங்கள், *auloi* (நடனத்தின் ஒரு பாணி), மற்றும் ஆபாசப் பாடல்களை, "சாத்தானின் மாபெரும் குப்பைக் குவியல்" என்று குறிப்பிட்டார்.[11] புல்லாங்குழல், யாழ் மற்றும் சுரமண்டலம் வாசிப்பவர்கள் தங்களின் தொழிலைத் துறந்தால் ஒழிய அவர்களுக்கு ஞானஸ்நானம் மறுக்கப்பட்டது.[12] இசைக்கருவிகள், ஒழுக்கவீனம் மற்றும் புறதெய்வ வழிபாட்டுச் சடங்குகள் ஆகியவற்றுடன் இணைவு

கொண்டிருந்தன. *கம்பி* மற்றும் *தந்தி வாத்தியங்கள்* என்ற இசைக்கருவிகளை மாத்திரமே வீடுகளில் இசைக்க கிளெமென்ட் அனுமதித்தார்.

சபைப்பிதாக்களில் ஒருவரும் சபை ஆராதனை கூடுகைகளில் இசைக் கருவி பயன்படுத்துதலைக் கண்டனம் செய்தது இல்லை என்று ஜேம்ஸ் மெக்கின்னான் என்பவர் வலியுறுத்தினார்.[13] அவர், இசைக் கருவிகள் பயன்பாட்டினால் ஏற்பட்ட முரண்பாட்டில் இருந்து எதிர்க்கூற்றுகள் எழவில்லை என்று குறிப்பிட்டார். விருந்துகள், அரங்க நிகழ்ச்சிகள் மற்றும் திருமணச் சடங்குகள் ஆகியவையே இது பற்றிய கலந்துரையாடலுக்கான அமைவுகளாக இருந்தன.

> முதல் இரண்டு நூற்றாண்டுகளில் … சங்கீதவகையிலான துதித்தல் மாத்திரமே இருந்தது மற்றும் புறதெய்வ வணக்க சமூகம் அல்லது மதப்பிரிவின் இசைக்கருவிகள் பற்றிய குறிப்பிடுதல் எதுவும் இல்லை …
>
> இசைக்கருவிகளுக்கு எதிரான கருத்து என்பதன் உபதேசம் மூன்று மற்றும் நான்காம் நூற்றாண்டு வரையிலும் மேம்பட்டதில்லை.[14]

கிறிஸ்தவர்கள், அரங்குகளின் இசைக்கருவிகளை வெறுக்க வேண்டியவர்களாக இருந்தனர் என்று தெர்த்துல்லியன் உரைத்தார்.[15]

ஐந்தாம் நூற்றாண்டு வாக்கில், யூதர்களின் பக்குவம் இல்லாமை காரணமாகவே இசைக்கருவிகள் அவர்களுக்கு அனுமதிக்கப்பட்டிருந்தன, ஆனால் சபையில், அவைகள் மிருகபலி போன்ற பக்குவமின்மையின் பிற செயல்களுடன் சேர்த்துத் தவிர்க்கப்பட்டன என்று நடத்துனர்கள் விவாதித்துக் கொண்டிருந்தனர்.[16] இது இசைக்கருவிகளின் பயன்பாட்டைப் பழைய ஏற்பாட்டுடன் இணைவுபடுத்தி, அதைப் புதிய ஏற்பாட்டிற்கு நேர்மாறாக்கிற்று.[17]

---

குறிப்புகள்

[1]Pliny *Pliny's Epistles* 10.96. [2]Barnabas *Epistle of Barnabas* 6. [3]2 *Clement* 9.10. [4]Ignatius *Epistle to the Romans* 2. [5]Ignatius *First Epistle to the Ephesians* 4. [6]Justin Martyr 1 *Apology* 67. [7]Justin Martyr *Dialogue with Trypho* 29. [8]Ibid., 74. [9]James McKinnon, "The Meaning of the Patristic Polemic Against Musical Instruments," *Current Musicology* (Spring 1965): 72. [10]Ibid.

[11]John Chrysostom *Homilies on First Corinthians* 12.11. [12]*Apostolic Constitutons* 8:31. [13]McKinnon, 71. [14]Ibid., 74. [15]Tertullian *The Shows* 10. [16]Theodoret *Questions and Answers for the Orthodox* 61:1353. [17]McKinnon, 76-77.